முதல் முறையாக ரயிலில் இருந்து ஏவப்பட்ட

அக்னி பிரைம் ஏவுகணை சோதனை வெற்றி

புதுடெல்லி, செப். 26: முதல் முறையாக ரயிலில் இருந்து ஏவப்பட்ட அக்னி பிரைம் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக வெற்றியடைந்துள்ளது. இதனை தொடர்ந்து விஞ்ஞானிகளுக்கு அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டு தெரிவித்து உள்ளார்.

அக்னி பிரைம் ஏவுகணை 2 ஆயிரம் கி.மீ தூரம் சென்று தாக்கும் திறன் கொண்டது. இது மேம்பட்ட தொழில்நுட்ப அம்சங்களுடன் வடிவமைக்கப்பட்டுள்ளது. நேற்று முன்தினம் இந்த ஏவுகணை முதல் முறையாக ரயில் மீதான மொபைல் லாஞ்சரில் இருந்து ஏவப்பட்டது. பாதுகாப்பு ஆராய்ச்சி மற்றும் வளர்ச்சி அமைப்பு விஞ்ஞானிகள் இந்த சோதனையை செய்து வெற்றி பெற்றுள்ளனர்.

ரயிலில் இருந்து ஏவுகணைகளை ஏவும் திறன் கொண்டா நாடாக இந்தியா மாறியுள்ளது. இதற்காக டிஆர்டிஓ விஞ்ஞானிகளுக்கு பாதுகாப்பு துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பாராட்டுக்களை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அமைச்சர் ராஜ்நாத் சிங் தனத எக்ஸ் தள பதிவில், "ரயிலில் உள்ள மொபைல் லாஞ்சரில் இருந்து அக்னி ஏவுகணை சோதனை நிகழ்த்தப்பட்டது. இது, 2000 கிமீ வரை சென்று தாக்கும் திறன் உட்பட பல்வேறு அம்சங்களைக் கொண்டுள்ளது. சிறப்பாக வடிவமைக்கப்பட்ட ரயில் மீதான மொபைல் லாஞ்சரில் இருந்து மேற்கொள்ளப்பட்ட முதல் ஏவுகணை சோதனை சிறப்பாகசெய்யப்பட்டது. இந்த வெற்றிகரமான சோதனை இந்தியாவை ரயில் மீதான மொபைல் லாஞ்சரில் இருந்து ஏவுகணைகள் ஏவும் திறன் கொண்ட நாடாக மாற்றி உள்ளது" என்று குறிப்பிட்டுள்ளார்.

வாக்காளர் பட்டியல் மோசடி விவகாரம்

ஐகோர்ட் உத்தரவுக்கு எதிராக மேல்முறையீடு

புதுடெல்லி, செப்.26: கடந்த 2024ம் ஆண்டு நடைபெற்ற 17வது மக்களவைத் தேர்தலில், வாக்காளர் பட்டியலில் போலி வாக்காளர்கள், ஒரே முகவரியில் அதிக எண்ணிக்கையில் வாக்காளர்கள் என மிகப்பெரிய மோசடி நடந்துள்ளதாக மக்களவை எதிர்கட்சி தலைவர் ராகுல் காந்தி கடுமையான குற்றச்சாட்டை முன்வைத்து இருந்தார். ஆனால் இதற்கு போதிய விளக்கத்தை தராமல் ராகுல் காந்தியை மிரட்டும் வகையில் தேர்தல் ஆணையம் நோட்டீஸ் பிறப்பித்து இருந்தது.

இந்த நிலையில் மேற்கண்ட விவகாரம் தொடர்பாக சென்னையை சேர்ந்த வெங்கட சிவக்குமார் என்பவர் உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்திருந்தார். அதில், "போலி வாக்க்காளர்கள் விவகாரத்தில் தேர்தல் ஆணையத்தின் நடவடிக்கை என்பது ஜனநாயக அமைப்புகளை பலவீனப்படுத்தும் வகையில் உள்ளது என்பதால் நீதிமன்றம் தலையிட வேண்டும். மேலும் அனைத்து தொகுதிகளுக்குமான வாக்காளர் பட்டியல் தரவுகளை, பொதுமக்கள் பார்வைக்கு இணையத்தில் வெளியிட உத்தரவிட வேண்டும். வாக்காளர் பட்டியல் மோசடி புகார்கள் தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள், விசாரணைகள் குறித்த முழுமையான அறிக்கையை தாக்கல் செய்ய இந்திய தேர்தல் ஆணையத்திற்கும் உத்தரவிட வேண்டும் என்று தெரிவித்திருந்தார்.

இதையடுத்து இந்த வழக்கை விசாரித்த உயர்நீதிமன்றம், வாக்காளர் பட்டியல் தொடர்பாக உச்ச நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் உள்ளது. எனவே இந்த மனு விளம்பர நோக்கத்துடன் தாக்கல் செய்யப்பட்டுள்ளது எனக்கூறி ஒரு லட்சம் ரூபாய் அபராதம் விதித்து தள்ளுபடி செய்து உத்தரவிட்டது.

இதையடுத்து மேற்கண்ட உயர்நீதிமன்ற உத்தரவுக்கு எதிராகவும், அதற்கு தடை விதிக்க வேண்டும் என்றும் வெங்கட சிவக்குமார் தரப்பில் உச்ச நீதிமன்றத்தில் மேல்முறையீட்டு மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

சட்டீஸ்கர் முன்னாள் முதல்வர் மகன் கைது

ராய்ப்பூர், செப்.26: சட்டீஸ்கரில் ரூ.2500கோடி மதுபான ஊழல் விவகாரத்தில் முன்னாள் முதல்வர் பூபேஷ் பாகலின் மகன் சைதன்யா பாகல் ஜூலை மாதம் 18ம் தேதி அமலாக்கத்துறை அதிகாரிகளால் கைதுசெய்யப்பட்டார். இந்நிலையில் பீகார் ஊழல் தடுப்புப்பிரிவு போலீசார்அவரைமீண்டும் கைது செய்தனர். சிறையில்உள்ளஅவரை கைதுசெய்தபோலீசார் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினார்கள். மதுபான ஊழல் தொடர்பாக அவரும் மற்றொரு குற்றவாளியானதிபென் சாவ்டாவும் கைது செய்யப்பட்டார். நீதிமன்றம் இருவரையும் அக். 6ம் தேதிவரைபோலீஸ்காவலில் வைத்து விசாரிக்க அனுமதி அளித்தது.

அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு 10 நாளில் அரசு இல்லம்

புதுடெல்லி, செப்.26: டெல்லி முன்னாள் முதலமைச்சரும் ஆம் ஆத்மி கட்சியின் தலைமை ஒருங்கிணைப்பாளருமான அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு அரசு இல்லம் ஒதுக்கீடு செய்யப்படாமல் இருந்த நிலையில், ஆம் ஆத்மி கட்சி தரப்பில் டெல்லி உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது. அதில், "டெல்லி முன்னாள் முதலமைச்சருக்கு அரசு இல்லத்தை ஒதுக்கீடு செய்ய ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகத்திற்கு உத்தரவிட வேண்டும் என்று கோரிக்கை வைக்கப்பட்டிருந்தது.

இதையடுத்து மேற்கண்ட வழக்கானது உயர்நீதிமன்றத்தில் நீதிபதி சச்சின் தத்தா அமர்வில் நேற்று மீண்டும் விசாரணைக்கு வந்தபோது, ஒன்றிய அரசு தரப்பில் ஆஜரான மூத்த வழக்கறிஞர், அரவிந்த் கெஜ்ரிவாலுக்கு பத்து நாட்களுக்குள் பொருத்தமான அரசு குடியிருப்பு ஒதுக்கீடு செய்யப்படும் எனவும், அதுகுறித்து விரைந்து நடவடிக்கை எடுக்கப்பட்டு வரப்படுவதாக நீதிபதிகள் முன்னிலையில் உறுதியளித்தார்.

இதையடுத்து உத்தரவிட்ட நீதிபதி, "இந்த விவகாரம் தொடர்பாக ஒன்றிய வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற மேம்பாட்டுத்துறை அமைச்சகம் அவர்களது நடவடிக்கையை மேம்படுத்த வேண்டும் என்று நீதிமன்றத்தின் தரப்பில் கேட்டுக்கொள்ளப்படுகிறது. ஏனெனில் இது அடிக்கடி எழும் பிரச்சனையாக உள்ளது.

அரசியல்வாதிகள் மட்டுமின்றி அரசியலில் அல்லாதவர்களுக்கும் இந்த பிரச்சனை தொடர்ந்து எழுகிறது. இருப்பினும் தற்போது ஒன்றிய அரசு தரப்பில் எடுக்கப்பட்டுள்ள முடிவை நீதிமன்றம் ஏற்கிறது. விரைவில் இதுகுறித்து தகுந்த உத்தரவை டெல்லி உயர்நீதிமன்றம் பிறப்பிக்கும் என உத்தரவிட்ட நீதிபதி, வழக்கின் விசாரணையை ஒத்திவைத்தார்.

லே நகரில் வெடித்த வன்முறைக்கு 4 பேர் பலி

லடாக்கில் ஊரடங்கு உத்தரவு 50 இளைஞர்கள் அதிரடி கைது

லே, செப்.26: லே நகரில் வெடித்த வன்முறைக்கு 4 பேர் பலியானதை தொடர்ந்து லடாக் முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டது. வன்முறையில் ஈடுபட்டதாக 50 பேர் கைது செய்யப்பட்டனர்.

லடாக் யூனியன் பிரதேசத்தை தனி மாநிலமாக அறிவிக்க கேட்டு ஒன்றிய அரசுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. இந்த பேச்சுவார்த்தை கடந்த 4 மாதமாக கிடப்பில் போடப்பட்டதால் காலநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக் செப்.10 ஆம் தேதி உண்ணாவிரதம் இருந்தார். அந்த உண்ணாவிரதத்தில் இருந்த 2 பேர் மயக்கம் அடைந்ததால் ஆத்திரம் அடைந்த இளைஞர்கள் நேற்று முன்தினம் முழு அடைப்புக்கு அழைப்பு விடுத்தனர். அப்போது அவர்கள் பேரணியாக சென்ற போது பயங்கர வன்முறை வெடித்தது. பாதுகாப்பு படையினருடன் மோதலில் ஈடுபட்டனர். பா.ஜ அலுவலகம், பாதுகாப்பு வாகனங்கள் தீ வைத்து எரிக்கப்பட்டன. கண்ணீர் குண்டு வீசப்பட்டது. தடியடி நடத்தப்பட்டது. இதில் 4 பேர் பலியானார்கள். 80க்கும் மேற்பட்டோர் படுகாயம் அடைந்தனர். வன்முறையில் காயமடைந்தவர்களில் மூன்று பேர் நேபாளத்தை சேர்ந்தவர்கள் என்பது தெரிய வந்துள்ளது. இதனால் வன்முறையின் பின்னணியில் வெளிநாட்டு சக்திகள் உள்ளதா என்று போலீசார் விசாரித்து வருகிறார்கள்.

நேற்று லடாக் முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமல்படுத்தப்பட்டது. 5 பேருக்கு மேல் கூட்டமாக கூட தடை விதிக்கப்பட்டது. வன்முறை நடந்த லே நகரில் நேற்று போலீசார் மற்றும் துணை ராணுவப்படையினர் ரோந்து சென்று அமைதியை கொண்டு வர நடவடிக்கை எடுத்தனர். மேலும் வன்முறை தொடர்பாக 50க்கும் மேற்பட்ட இளைஞர்கள் அதிரடியாக கைது செய்யப்பட்டனர். கார்கில், ஜான்ஸ்கர், நுப்ரா, பதம், சாங்டாங், டிராஸ் மற்றும் லமாயுரு ஆகிய இடங்களில் கலவரத் தடுப்புப் பிரிவு காவல்துறை மற்றும் துணை ராணுவப் படையினர் அதிக அளவில் நிறுத்தப்பட்டுள்ளனர்.

இதற்கிடையே லே நகரில் வன்முறை வெடித்ததற்கு காலநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக்கின் தூண்டுதலே காரணம் என ஒன்றிய உள்துறை அமைச்சகம் குற்றம்சாட்டியுள்ளது. லடாக்கின் லெப்டினன்ட் கவர்னர் கவிந்தர் குப்தா கூறுகையில், 'இந்த வன்முறையில் ஈடுபட்ட அனைவர் மீதும் விரைவில் நடவடிக்கை எடுக்கப்படும்' என்றார். மேலும், இந்த வன்முறை சம்பவத்துக்கு காரணம் காங்கிரஸ் கட்சியை சேர்ந்த கவுன்சிலர்தான் காரணம் என குற்றம் சாட்டப்பட்டுள்ளது. அவர் மீது நடவடிக்கை பாயும் என தெரிகிறது.

இளைஞர்களின் கோரிக்கையை பரிசீலிக்க வேண்டும்

மூத்த காங்கிரஸ் தலைவர் கரண் சிங் கூறுகையில், '1947 முதல் லடாக் மக்கள் உறுதியாக இந்திய ஆதரவாளர்களாக இருந்து வருகின்றனர். லடாக்கில் உள்ள இளைஞர்கள் தங்கள் வேலை வாய்ப்புகள் மறைந்து வருவதாகத் தோன்றுவதால் மிகவும் கோபமடைந்துள்ளதாகத் தெரிகிறது. இளைஞர்களின் கோரிக்கைகளை கவனமாக பரிசீலித்து, அரசியலமைப்பு பாதுகாப்புகள் உட்பட அவர்களின் விருப்பங்களை நிறைவேற்ற என்ன உறுதியான நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்பதை அதிகாரிகள் கவனிக்க வேண்டும். இளைஞர்கள் கிளர்ச்சி மீண்டும் வளராமல் தடுக்க இது மிகவும் முக்கியமானது' என்றார்.

லடாக் வன்முறையிலிருந்து பாடம் கற்க வேண்டும்

தேசிய மாநாட்டு கட்சி தலைவர் பரூக் அப்துல்லா கூறுகையில், 'ஜம்மு காஷ்மீருக்கு மாநில அந்தஸ்து உறுதியளிக்கப்பட்டது, ஆனால் அது எங்கே? அவர்கள் லடாக்கில் நடந்த வன்முறையில் இருந்து பாடம் கற்றுக்கொள்ள வேண்டும். நீங்கள் எங்களுக்கு அளித்த வாக்குறுதிகள் எங்கே? வேலைகள் எங்கே? வெளியிலிருந்து வேலைக்கு திணிக்கப்படுகிறார்கள். இளைஞர்கள் எதிர்காலத்தில் என்ன செய்யப்போகிறார்கள் என்பதை நான் உறுதியாகச் சொல்ல முடியாது. லடாக் வன்முறைக்கு காங்கிரசை குற்றம் சாட்டுவது பொறுப்பைத் திசைதிருப்பும் முயற்சி. லடாக் நிர்வாகம் பா.ஜ கையில் உள்ளது. அப்படி இருக்கும் போது காங்கிரஸ் எங்கிருந்து வந்தது?. லடாக்கில் சீனா எவ்வளவு நிலத்தை ஆக்கிரமித்துள்ளனர் என்பது முழு உலகிற்கும் தெரியும். எங்கள் நிலத்தில் நாங்கள் ரோந்து கூட செய்ய முடியாது. பொய்களின் உலகில் எவ்வளவு காலம் வாழ்வோம்?' என்றார்.

வெளிநாட்டு நிதி உரிம அனுமதி ரத்து

காலநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக் நிறுவிய லடாக் மாணவர் கல்வி மற்றும் கலாச்சார இயக்கத்தின் வெளிநாட்டு நிதி பங்களிப்பு உரிமத்தை ஒன்றிய உள்துறை அமைச்சகம் உடனடியாக அமலுக்கு வரும் வகையில் ரத்து செய்துள்ளது. நிதிமுறைகேடு என்று கூறி இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

பள்ளிகள், கல்லூரிகள் இன்றும் மூடல்

லே மாவட்டத்தில் நிலவும் பதற்றமான சூழ்நிலை காரணமாக அனைத்து பள்ளிகள் மற்றும் கல்லூரிகளும் இன்றும் மூடப்படும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

என்னை சிறையில் அடைத்தால் மேலும் வன்முறை வெடிக்கும்

காலநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக் கூறுகையில், 'லடாக்கில் சமீபத்தில் நடந்த வன்முறை போராட்டங்களுக்கு என்னைக் குறை கூறும் உள்துறை அமைச்சகத்தின் செயல் பலிகடா தந்திரம் ஆகும். என்னை கடுமையான பொதுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் என்னைக் கொண்டு வந்து இரண்டு ஆண்டுகள் சிறையில் அடைக்க அவர்கள் ஒரு வழக்கை உருவாக்குகிறார்கள். நான் அதற்குத் தயாராக இருக்கிறேன். என்னை சிறையில் அடைத்தால், அது மேலும் வன்முறையை தூண்டுவதாக இருக்கும். இளைஞர்கள் ஏற்கனவே விரக்தியடைந்திருப்பதால புத்திசாலித்தனத்தை விட ஞானம் நமக்குத் தேவை. வன்முறைக்கு உண்மையான காரணம் 6 ஆண்டுகால வேலையின்மை மற்றும் ஒவ்வொரு மட்டத்திலும் நிறைவேற்றப்படாத வாக்குறுதிகள் தான்' என்றார்.

வாங்சுக் நிறுவனம் மீது சிபிஐ விசாரணை: காலநிலை ஆர்வலர் சோனம் வாங்சுக்கின் நிறுவனமான ஹிமாலயன் இன்ஸ்டிடியூட் ஆப் ஆல்டர்நேட்டிவ்ஸ் லடாக்கில் வெளிநாட்டு பங்களிப்பு ஒழுங்குமுறை சட்டத்தை மீறியதாக ஒரு புகார் உள்ளது. இதுபற்றி நேற்று சிபிஐ விசாரணை தொடங்கி உள்ளது. இந்த புகார் குறிப்பிடும் விஷயங்கள் அரசாங்கத்திற்கு முறையாக செலுத்தப்பட்ட வரிகளுடன் சேவை ஒப்பந்தங்கள் தொடர்பானவை என்று வாங்சுக் தெரிவித்தார்.

திருமலையில் 4 ஆயிரம் பக்தர்கள் தங்கும் வகையில்

ரூ.102 கோடியில் கட்டப்பட்ட யாத்ரிகர்கள் சமுதாய கூடம்

துணை ஜனாதிபதி சி.பி.ராதாகிருஷ்ணன் திறந்து வைத்தார்

திருமலை, செப்.26: திருப்பதி ஏழுமலையான் கோயிலில் சுவாமி தரிசனத்திற்காக வரும் பக்தர்களுக்காக வெங்கடாத்ரி நிலையம் (யாத்ரீகர் வசதி மையம்-5) தேவஸ்தானம் சார்பில் ரூ.102 கோடி செலவில் கட்டப்பட்டது. இதில் முன்பதிவு இல்லாமல் திருமலைக்கு வரும் பக்தர்கள், ஒரே நேரத்தில் 4 ஆயிரம் பேர் இலவசமாக தங்கும் வகையில் 16 தங்குமிடங்கள், 2,400 லாக்கர்கள், 24 மணி நேர சூடான நீர் வசதி மற்றும் பிற வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் ஒரே நேரத்தில் 80 பக்தர்கள் மெட்டையடித்து தலைமுடி காணிக்கை செலுத்தி தங்கள் பிரார்த்தனைகளை நிறைவேற்றும் வகையில் ஒரு கல்யாண கட்டாவும் அமைக்கப்பட்டுள்ளது. அதேபோல் ஒரே நேரத்தில் 1,400 பக்தர்கள் சாப்பிடும் வகையில் 2 பெரிய டைனிங் அரங்குகளும் அமைக்கப்பட்டுள்ளது.

இந்த வெங்கடாத்திரி நிலையத்தை நேற்று துணை ஜனாதிபதி சி.பி. ராதாகிருஷ்ணன், முதலமைச்சர் சந்திரபாபு நாயுடு ஆகியோர் இணைந்து திறந்து வைத்தனர்.

இதனையடுத்து வைகுண்டம் கியூ காம்ப்ளக்ஸ் வளாகத்தில் புதிதாக அமைக்கப்பட்ட மேம்பட்ட ஒருங்கிணைந்த கட்டுப்பாட்டு மையத்தை முதல்வர் திறந்து வைத்தார்.

விமான படைக்கு மேலும் 97 தேஜஸ் இலகு ரக விமானங்கள்

ரூ.62,370 கோடி ஒப்பந்தம் கையெழுத்து

புதுடெல்லி, செப்.26: இந்திய விமானப்படைக்கு 97 தேஜஸ் இலகு ரக போர் விமானங்களை வாங்குவதற்காக, இந்துஸ்தான் ஏரோநாட்டிக்ஸ் லிமிடெட் (எச்ஏஎல்) நிறுவனத்துடன் ரூ.62,370 கோடி ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டுள்ளது.

இதுகுறித்து பாதுகாப்பு அமைச்சகம் வெளியிட்டுள்ள அறிக்கை:

இந்திய விமானப்படையில் மிக்-21ரகபோர் விமானங்கள் ஓய்வு பெறும் நிலையில், தேஜஸ் எம்கே-1ஏ ரகபோர் விமானங்கள் பயன்படுத்தப்பட இருக்கிறது. இதை தொடர்ந்து, ரூ.62,370 கோடியில் மேலும் 97 தேஜஸ் எம்கே-1ஏ விமானங்களை வாங்க விமானப்படை முடிவு செய்தது.

சில மாதங்களுக்கு முன்னர் பிரதமர் மோடி தலைமையிலான பாதுகாப்புக்கான ஒன்றிய அமைச்சரவை குழு இதற்கு ஒப்புதல் அளித்தது.

எச்ஏஎல் நிறுவனத்துக்கு 2வது முறையாக ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது. கடந்த 2021ம் ஆண்டு, இந்திய விமானப்படைக்கு 83 தேஜாஸ் எம்கே-1ஏ விமானங்களை கொள்முதல் செய்ய எச்ஏஎல் நிறுவனத்துடன் ரூ. 48,000 கோடி மதிப்பிலான ஒப்பந்தத்தில் பாதுகாப்பு அமைச்சகம் கையெழுத்திட்டது. இந்த மேம்பட்ட விமானத்தில் சுயம் ரக்ஷா கவச் மற்றும் கட்டுப்பாட்டு கருவிகள் இடம் பெற்றிருக்கும். இதில் 64 சதவீதத்திற்கு அதிகமான பொருட்கள் உள்நாட்டில் தயாரிக்கப்பட்டவை. இந்த போர் விமானங்களின் விநியோகம் வரும் 2027-28ல் தொடங்கும். இவ்வாறு அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. இது ஒற்றை என்ஜின் கொண்ட மிக்-21 போர் விமானத்துக்கு மாற்றாகும். அதிக அச்சுறுத்தலான வான் சூழல்களில் இயங்கக்கூடிய பன்னோக்கு போர் விமானமாகும். இந்திய விமான படையின் போர் பிரிவில் ஒதுக்கப்பட்ட விமான பிரிவுகளின் எண்ணிக்கை 42ல் இருந்து 31 ஆக குறைந்து விட்டதால் அதிகளவில் போர் விமானங்கள் இணைக்கப்பட்டு வருகிறது.

சமூக ஊடக பதிவால்

குஜராத் கிராமத்தில் பயங்கர கலவரம்

கடைகள் சூறை, வாகனங்கள் உடைப்பு

அகமதாபாத், செப்.26: குஜராத் கிராமத்தில் சர்ச்சைக்குரிய சமூக ஊடக பதிவால் பயங்கர கலவரம் ஏற்பட்டது. கல்வீச்சில் பல கடைகள் சேதப்பட்டன. இது தொடர்பாக 60க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டனர்.

குஜராத்,காந்திநகர் மாவட்டம் தேஹம் தாலுகாவில் பஹியால் கிராமம் உள்ளது. நேற்றுமுன்தினம் இரவு சமூக ஊடகங்களில் ஆட்சேபனைக்குரிய பதிவு வெளியானதையடுத்து கலவரம் ஏற்பட்டது. கலவரத்தில் 4 கடைகள் மற்றும் 6 வாகனங்கள் சேதப்படுத்தப்பட்டன. இது குறித்து மாவட்ட எஸ்பி ரவிதேஜா வாசம்செட்டி," உபி உள்ளிட்ட வட மாநிலங்களில் முஸ்லிம்கள் சமூக ஊடகங்களில் ஐ லவ் முகமது என்ற பிரசாரம் மேற்கொண்டு வருகின்றனர்.இதற்கு போட்டியாக பஹியால் கிராமத்தை சேர்ந்த இந்து கடைக்காரர் ஒருவர் தன்னுடைய வாட்சப்பில் ஒரு ஸ்டேட்டஸ் வைத்தது சர்ச்சையை ஏற்படுத்தியது.

இதனால் ஆத்திரமடைந்த முஸ்லிம்கள் அந்த நபரின் கடையை ஷட்டரை உடைத்து கடையில் இருந்த பொருட்களை வெளியில் எடுத்து போட்டு தீ வைத்தனர். மேலும் அருகில் உள்ள வீடுகளின் மீது கற்களை வீசி தாக்குதல் நடத்தினர். இந்துக்களும் இதர நபர்களின் வீடுகளை நோக்கி கற்களை வீசினர். இதையடுத்து அங்கு போலீசார் விரைந்து சென்று பாதுகாப்பு பணியில் ஈடுபடுத்தப்பட்டனர். நிலைமை கட்டுக்குள் இருக்கிறது" என்றார்.

உதவி எஸ்பி ஆயுஷ் ஜெயின்,''4 கடைகள் சேதப்படுத்தப்பட்டுள்ளன. 6 வாகனங்கள் சேதமடைந்தன. 60க்கும் மேற்பட்டோர் கைது செய்யப்பட்டுள்ளனர்" என்றார். கலவரத்தில் எத்தனை பேர் காயமடைந்தனர் என்பது பற்றிய விவரம் எதையும் போலீசார் தெரிவிக்கவில்லை.

CHENNAI METRO RAIL LIMITED
(A Joint Venture of Govt. of India & Govt. of Tamil Nadu)
(ISO 9001:2015 AND ISO 14001:2015 CERTIFIED)
METROS, Anna Salai, Nandanam, Chennai - 600 035
GeM tender Id: GEM/2025/B/6651831
NOTICE INVITING TENDER
CMRL invites online bids for the tender "Supply of Traction Converter and Auxiliary Converter Spares for Rolling Stock Maintenance Activity". Tender documents can be downloaded from https://gem.gov.in.
For Managing Director
Chief General Manager (RS,S&T)
Chennai Metro Rail Limited
DIPR/5399/Tender/2025

தமிழ்நாடு அரசு
ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி மாவட்டம்
முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் (சேமிப்பு நிதி) 2025-2026
ஒப்பந்தப்புள்ளி அழைப்பு
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. தருமபுரி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை இணை இயக்குநர் / திட்ட இயக்குநர் அவர்களால், முதல்வரின் கிராம சாலைகள் மேம்பாட்டு திட்டம் (சேமிப்பு நிதி) 2025-2026 கீழ் சாலைப்பணிக்கு, மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறை முறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தபுள்ளி படிவத்தினை www.tntenders.gov.in என்ற இணைய தள முகவரியில், இலவசமாக, 29.09.2025 முதல் 30.10.2025 வரையிலான காலத்தில் எடுத்துக் கொள்ளலாம்.
4. பொதுவான நேரம் மற்றும் நாள் :
(i) மின் ஒப்பந்த படிவம் பதிவிறக்கம் செய்ய கடைசி நாள் மற்றும் நேரம் : 30.10.2025 மாலை 3.00 மணி
(ii) மின் ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பிக்கப்பட வேண்டிய கடைசி நாள் மற்றும் நேரம் : 30.10.2025 மாலை 3.00 மணி
(iii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 30.10.2025 மாலை 4.00 மணி
இணை இயக்குநர்/ திட்ட இயக்குநர்,
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, தருமபுரி
செ.ம.தொ.இ.5356/ஒப்பந்தப்புள்ளி/2025

தமிழ்நாடு அரசு,
புதுக்கோட்டை மாநகராட்சி
மின்னணு ஒப்பந்தப்புள்ளி அழைப்பு (இரு உறை முறை)
ந.க.எண்: 6357 /2025 /இ1 / நாள்:-24.09.2025
புதுக்கோட்டை மாநகராட்சி பராமரிப்பில் உள்ள திருக்கோகர்ணம், திருவப்பூர், ராஜகோபாலபுரம், அடப்பன்வயல், காமராஜபுரம், தர்மராஜபிள்ளை, காந்திநகர் மற்றும் உசிலங்குளம் ஆகிய பள்ளிகளில் மூன்றாண்டுகளுக்கு காலை உணவு தயாரித்து வழங்கும் பணி புதுக்கோட்டை மாநகராட்சி ஆணையாளர் அவர்களால் ஒப்பந்தப்புள்ளிகள் வரவேற்கப்படுகின்றன.
பணியின் மதிப்பு - ரூ.91.00 இலட்சம்
முன்வைப்புத்தொகை - ரூ.91,000/-
1. ஒப்பந்தப்புள்ளி நகலுக்கான http://tntenders.gov.in என்ற இணைய தள முகவரியிலிருந்து ஒப்பந்தப்புள்ளி குறித்த முழு விபரங்களும் பெறலாம்.
2.

அ. ஒப்பந்தப்புள்ளிகள் படிவம் பதிவிறக்கம் செய்தல்	29.09.2025 காலை 11.00 மணி முதல்
ஆ. ஒப்பந்தப்புள்ளி முன்கலந்தாய்வு கூட்டம்	03.10.2025 காலை 11.00 மணி.
இ. ஒப்பந்தப்புள்ளி சமர்ப்பித்தல்	10.10.2025 மாலை 3.00 மணி வரை
ஈ. தொழில்நுட்ப ஒப்பந்தப்புள்ளிகள் திறத்தல்	10.10.2025 மாலை 3.30 மணி

3.ஒப்பந்தப்புள்ளி அட்டவணையில் ஏதேனும் திருத்தங்கள் / மாறுதல்கள் இருப்பின் மேல் குறிப்பிட்ட இணையதளத்தில் மட்டுமே வெளியிடப்படும். இதர விபரங்களை அலுவலக நேரத்தில் மாநகராட்சி அலுவலக பொறியியல் பிரிவில் கேட்டு தெரிந்துகொள்ளலாம்.
ஆணையர்,
புதுக்கோட்டை மாநகராட்சி.
செ.ம.தொ.இ./ 5393/ ஒப்பந்தப்புள்ளி / 2025

தமிழ்நாடு அரசு
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை
ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு
1. முழுமையான விவரங்களுக்கு www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியினை பார்வையிடவும்.
2. மின்னணு ஒப்பந்தப்புள்ளி முறையில் புதுக்கோட்டை மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் அவர்களால் கலைஞரின் கனவு இல்லம் மற்றும் முதலமைச்சரின் வீடுகள் மறுகட்டுமான திட்டம் 2025-26 ஆம் ஆண்டிற்கான திட்டங்களுக்கு இரும்பு கம்பிகள் கொள்முதலுக்கான மின் ஒப்பந்தப்புள்ளிகள் (இரண்டு உறைமுறை) வரவேற்கப்படுகிறது.
3. ஒப்பந்தப்புள்ளி ஆவணங்களை www.tntenders.gov.in என்ற இணையதள முகவரியில் இலவசமாக 26.09.2025 முதல் 17.10.2025 வரையிலான காலத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.
4. ஒப்பந்தப்புள்ளி கோருவதற்கான கடைசி நாள் மற்றும் நேரம்:
(i) மின் ஒப்பந்தப்புள்ளி படிவத்தினை பதிவிறக்கம் செய்ய மற்றும் சமர்ப்பிக்க கடைசி நாள் மற்றும் நேரம் : 17.10.2025 , பி.ப. 3.00 மணி வரை
(ii) மின் ஒப்பந்தப்புள்ளிகள் திறக்கப்படும் நாள் மற்றும் நேரம் : 17.10.2025, பி.ப. 5.00 மணி முதல்
இணை இயக்குநர்/திட்ட இயக்குநர்
மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை, புதுக்கோட்டை.
செ.ம.தொ.இ.5391/ஒப்பந்தப்புள்ளி/2025

கிரிஹம் ஹவுசிங் ஃபைனான்ஸ் லிமிடெட்
(முன்னர் பூனாவால்லா ஹவுசிங் ஃபைனான்ஸ் லிட். என அறியப்பட்டது)
பதிவு பெற்ற அலுவலகம்: 6 ஆவது தளம், பி பில்டிங், கங்கா ட்ரூனோ, லோஹேகான், புனே, மகாராஷ்டிரா-411014. கிளை அலகு: 24/C5, முதல் தளம், செல்லய்யா நாடார் டவர், எஸ்.என். நெடுஞ்சாலை, சென்ட்ரல் தியேட்டர் அருகில், திருநெல்வேலி, தமிழ்நாடு-627001
மின்-ஏலம்- விற்பனை அறிவிப்பு சர்ஃபாசி சட்டத்தின் கீழ் கடனீட்டு அசையா சொத்து விற்பனை
பத்திரமயமாக்கல் மற்றும் நிதிச் சொத்துகளை மறுசீரமைத்தல் மேலும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கம் சட்டம், 2002 (சட்டம்) மேலும் கடனீட்டுச் சொத்து உரிமை (அமலாக்கம்) விதிகள், 2002 (விதிகள்) விதி 8&9 கீழ் அசையா சொத்துகளின் மின்-ஏலம் விற்பனை அறிவிப்பு.
இங்கே உள்ள அறிவிப்பின்மூலம் பொதுமக்களுக்கு பொதுவாகவும், கடன்தாரர்கள்/ உப-கடன்தாரர்கள்/ அடமானதாரர்கள் / ஜாமின்தாரர்களுக்கு குறிப்பாகவும் தெரிவிக்கப்படுவது என்னவென்றால், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடனீட்டுச் சொத்துகளானது கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட்டின் (முன்னதாக பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்றிருப்பட்டது. பூனாவால்லா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற பெயர் கிரிஹம் ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்று 17 நவம்பர் 2023 தேதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளது (முன்னதாக மக்மா ஹவுசிங் பைனான்ஸ் லிமிடெட் என்ற அறியப்பட்டது முதலில் ஜீ மனி ஹவுசிங் பைனான்ஸ் பப்ளிக் லிமிடெட் கம்பென